நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
முன்னிலை : திருமதி. N.பீரித்தி, B.A., B.L.,
நீதித்துறை நடுவர், வானூர்.
2026=ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 09-ஆம் நாள்
Crl.M.P.No.423/2026

ஜெயபாலன்
த/பெ. ஜெகநாதன் (45/2026)

......மனுதாரர்/எதிரி

-எதிர்-

காவல் ஆய்வாளர்,
கிளியனூர் காவல்நிலையம்,
குற்ற எண்.175/2026

...... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

மனுதாரர்/எதிரி தரப்பில் எதிரியை பிணையில் விடுவிக்கக் கோரி 480 பி.என்.எஸ்.எஸ். பிரிவின் கீழ் பிணை மனு 03/06/2026 அன்று மனுதாரர்/எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு. S. Sugumar அவர்களால் தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு இவ்வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

<u>உத்தரவு</u>

1) மனுதாரர்/எதிரி மீது கிளியனூர் காவல்நிலைய குற்ற எண்.175/2026 U/s.4 of TNPHW Act, 118(1), 296(b), 351(3) BNSன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு எதிரி 02/06/2026 முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்றும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும், நீதிமன்றம் கோரும் பிணைகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளதாகவும், எதிரி தலைமறைவாக மாட்டார் என்றும், மனுதாரர்/எதிரி தரப்பில் பிணைமனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் அறிவிப்பில் இவ்வழக்கின் புலன் விசாரணை நிலவையில் உள்ளது என்றும், எதிரியை பிணையில் விட்டால் நீதிமன்ற விசாரணையின் போது ஆஜராகமாட்டார் என்றும், மேலும் எதிரி இதுபோன்ற குற்ற செயல்களில் மீண்டும் ஈடுபடுவார் என்றும் மேலும் இவ்வழக்கில் காயம்பட்டவர்கள் உள்நோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளார்கள் என்றும் எனவே எதிரியை பிணையில் விட கடுமையான ஆட்சேபணை தெரிவித்துள்ளார்.

3) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, ஆட்சேபணை மற்றும் இவ்வழக்காவணங்கள், இந்நீதிமன்றத்தால் நன்கு பரிசீலிக்கப்பட்டது. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் அறிவிப்பில் இவ்வழக்கின் புலன் விசாரணை நிலுவையில் உள்ளதை கருத்தில் கொண்டும், எதிரியை பிணையில் விட்டால் நீதிமன்ற விசாரணையின் போது ஆஜராகமாட்டார் என்றும், மேலும் இவ்வழக்கில் காயம்பட்டவர்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருப்பதாக அரசு தரப்பில் குறிப்பிட்டுள்ளதை கருத்தில் கொண்டும் சமூக மற்றும் நீதியின் நலன் கருதி எதிரி தரப்பில் தாக்கல் செய்துள்ள இப்பிணை மனுவினை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு முழுவதும் தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 09/06/2026-ம் நாள் உத்தரவிடப்பட்டது.

Sd/- N.Preethi,
நீதித்துறை நடுவர்,
வானூர்.